திரு. கரு. சீமைச்சாமி : தலைவர் அவர்களே, நெய் தரம் குறைந்ததோடு, பால் பண்ணையிலே இருக்கின்ற வெண்ணெயிலே பல மோசடிகள் நடந்ததாகச் சொல்லப்படுகிறதே, அதன்பேரில் யாராவது கைது செய்யப்பட்டார்களா? அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, வெண்ணெயிலே தகராறு இல்லை, மதுரையிலுள்ள பால்பண்ணையிலேதான் தகராறு. இது சம்பந்தமாக பல அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. சு. துரைசாமி : தலைவர் அவர்களே, யார் யார் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அது பற்றிய முழு விவரம் என்னிடத்தில் இல்லை. அது சம்பந்தமாக சில அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். சிலர் தற்காலிகமாக வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள்.

திரு. டி. மார்டின் : தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் லட்சத்தில் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இதனால் அரசுக்கு ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு என்று சொல்ல முடியவில்லை. 'List of irregularities and losses' என்ற வகையில் முழுவிவரம் இல்லை. வழக்கு நீதிமன்றத்தில் இருப்பதால் மொத்தமாகச் சொல்கிறேன். 25,13,000 ரூபாய் என்று அரசாங்கம் கண்டுபிடித்திருக்கிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெண்களுக்காகத் தொழிற் பயிற்சிப் பள்ளி

* 479 வினா—**திரு. வை. சுவாமிநாதன்** : மாண்புமிகு தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பெண்களுக்காக தொழிற் பயிற்சிப் பள்ளி அமைக்க தமிழக அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள பாய்லர் தொழிற்சாலை, சிறுதொழிற்சாலைகள், சின்கோமீடர் போன்றவற்றில் பெண்களுக்குப் பயிற்சி அளித்தால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்க சௌகரியமாக இருக்கும். இதை அரசாங்கம் பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, ஆண்களுக்கு வேலைவாய்ப்புக்களைத் தேடித் தந்துவிட்டு, அதற்குப் பின்னாலே இதுபற்றி யோசிக்கலாம்.